# தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்


**<u>கேள்வி:-</u>**

(அ) சீரமைக்கப்பட்ட விநியோகத் துறை திட்டம் (RDSS) மூலம், DISCOM எனப்படும் மின் பகிர்வு நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறன் மற்றும் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்த 5 ஆண்டுகளில், அதாவது 2021-22 நிதியாண்டு முதல் 2025-26 நிதியாண்டு வரை 3,03,758 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அப்படியானால், கூறப்பட்ட திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான நிதிப் பங்களிப்பு விவரங்கள் என்ன?

(இ) இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உதவியாக, (REC) எனப்படும் ரூரல் எலக்ட்ரிபிகேசன் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் (PFC) எனப்படும் பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகியவை மைய நிறுவனங்களாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

(ஈ) தமிழ்நாடு ஜெனரேஷன் அண்ட் டிஸ்ட்ரிபியூஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் (TANGEDCO) க்கு, அதை செயல்படுத்துவதற்காக, (ஆத்மநிர்பர் பாரத் அபியான்) திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? மற்றும்,

(இ) TANGEDCO விற்கு REC லிமிடெட் வழங்கிய மொத்த நிதி உதவி எவ்வளவு? மற்றும் TANGEDCO மற்றும் தனியார்

நிறுவனங்களால், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் மின்சாரம் தொடர்பான திட்டங்களுக்கு, கூடுதல் ஆதரவை வழங்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

**மத்திய மின்சாரம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. ஆர்.கே. சிங் பதில்:-**

(அ) & (ஆ) : நிதி ரீதியாக நிலையான மற்றும் செயல்பாட்டுத் திறனுள்ள விநியோகத் துறையின் மூலம் நுகர்வோருக்கு மின்சார விநியோகத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்திய அரசு புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறைத் திட்டத்தை (RDSS) தொடங்கியுள்ளது. திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

(i) இத்திட்டத்தின் செலவு ரூ.3,03,758 கோடி மற்றும் மத்திய அரசிடமிருந்து ரூ.97,631 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) இந்தத் திட்டம், AT&C எனப்படும் மொத்த பரிமாற்றம் மற்றும் வணிகத்தில் ஏற்படும் இழப்புகளை, இந்திய அளவில், 12-முதல் 15%-க்குக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மற்றும் ACS (average cost of supply per unit of power) ஒரு யூனிட் மின்சாரம் வினியோகிக்க ஆகும் சராசரி செலவு - ARR (average revenue realized) சராசரி நிதி ஒதுக்கீடு, ஆகியவற்றின் இடையே உள்ள வேறுபாட்டை 2024-25ம் ஆண்டுக்குள் 0%கு கொண்டுவரப்படும்.

(iii) இந்தத் திட்டமானது 5 ஆண்டுகள் (FY 2021-22 முதல் FY 2025-26 நிதியாண்டு வரையான) காலத்தைக் கொண்டுள்ளது. திட்டம் முடியும் தேதி 31.03.2026.

(iv) இத்திட்டத்தில் இரண்டு முக்கிய கூறுகள் உள்ளன: பகுதி 'A' - ப்ரீபெய்ட் ஸ்மார்ட் மீட்டரிங் & சிஸ்டம் மீட்டரிங் மற்றும் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் பகுதி 'B' பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் பிற செயல்படுத்துதல் மற்றும் துணை செயல்பாடுகளுக்கு நிதி ஆதரவு அளித்தல்.

(v) திட்டத்தின் கீழ் நிதி வெளியீடு முடிவுகள் மற்றும் சீர்திருத்தங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் கீழ் நிதியை வெளியிடுவதற்கு மதிப்பீடு செய்வதற்கு முன், தகுதிக்கு முந்தைய அளவுகோல்களை டிஸ்காம்கள் கட்டாயமாக பூர்த்தி செய்ய வேண்டும்.

(vi) மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக (Revamped Distribution Sector Scheme) புதுப்பிக்கப்பட்ட விநியோகத் திட்டம் RDSS-ன் கீழ் அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் இணைப்பில் உள்ளன.

(ஈ): ரூரல் எலக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் (REC) லிமிடெட் மற்றும் பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (PFC) ஆகியவை, நாடு முழுவதும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான மைய நிறுவனங்ககளாக (நோடல் ஏஜென்சிகளாக) நியமிக்கப்பட்டு, பொறுப்பேற்றுள்ளன.

இந்த நோடல் ஏஜென்சிகளுக்கு இடையே மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களுக்கான ஒதுக்கீடு விவரங்கள் இணைப்பு-II இல் உள்ளன.

(ஈ): TANGEDCO க்கு PFC மற்றும் REC மூலம் பணப்புழக்கம் உட்செலுத்துதல் திட்டத்தின் (ஆத்மநிர்பர் பாரத் அபியான்) கீழ் இதுவரை அனுமதிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட கடனின் விவரங்கள் பின்வருமாறு:

REC நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 17,830.30 கோடி.

முதல் தவணையாக விடுவிக்கப்பட்டத் தொகை ரூ.8,699.14 கோடி.

2ம் தவணையாக விடுவிக்கப்பட்டத் தொகை ரூ.8,358.77 கோடி.

விடுவிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 17,057.91 கோடி.

PFC நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.12,400 கோடி.

முதல் தவணையாக விடுவிக்கப்பட்டத் தொகை ரூ.6001.36 கோடி.

இரண்டாம் தவணையாக விடுவிக்கப்பட்டத் தொகை ரூ.3,736.04 கோடி.

விடுவிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.9,737.40 கோடி.

இரண்டு நிறுவனங்களுக்கும் சேர்த்து அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.30,230.30 கோடி.

இரு நிறுவனங்களுக்கும் முதல் தவணையாக விடுவிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.14,700.49 கோடி.

இரண்டாம் தவணையாக விடுவிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.12,094.82 கோடி.

இரு நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.26,795.31 கோடி.

உ): REC ltd வழங்கப்பட்ட மொத்த நிதி உதவியின் விவரங்கள். TANGEDCO க்கு இந்திய அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட மானியத்தின் விவரங்கள் இணைப்பு-III இல் உள்ளன.

******